[23rd August 1960

**Sri N. MAHALINGAM :** தவறான போலி மருந்துகளை விற்பவர்களுக்கு கொடுக்கப்படுகிற தண்டனை மிகவும் குறைவாக இருக்கிறது. பாலில் தண்ணீர் கலப்பவர்களுக்கே ஆயிரக்கணக்கான ரூபாய் அபராதமும், ஜெயில் தண்டனையும் இருக்கிறபோது—போலி மருந்துகளை விற்பவர்களுக்கும் அதிகமான—கடுமையான தண்டனை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** பாலில் தண்ணீர் கலப்பவர்களுக்கும் ஆரம்பத்தில் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று தான் அபராதம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அதுபோலவே இதுவும் வளரும்.

*Trade Unions*

* **405 Q.—Sri P. G. MANICKAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஒரு தொழில் நடத்தும் ஸ்தாபனத்திலே ஒரு தொழிலாளர் சங்கத்துக்கு மாத்திரம் ரெஜிஸ்ட்ரேஷன் செய்துகொள்ள அனுமதி கொடுப்பது பற்றி சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியானால் விவரங்கள் யாவை ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** *Clauses (a) and (b).*—The question of placing restrictions on the number of unions to be registered in an industry or undertaking was considered at the 17th Indian Labour Conference held at Madras during July 1959. The consensus of opinion was not in favour of placing any statutory restrictions on the number of unions that might be registered. This Government have accepted the above views of the Conference.

**Sri P. G. MANICKAM :** தொழிற்சங்கங்களிலே தொழிலாளர்களே நிர்வாகஸ்தர்களாக இருக்கவேண்டும் என்றும், தனிப்பட்டவர்கள் நிர்வாகஸ்தர்களாக இருக்கக்கூடாது என்றும் சட்டம் இயற்றுவதுபற்றி யூனியன் சர்க்கார் நம் சர்க்காருக்கு ஏதாவது தாக்கீது அனுப்பியிருக்கிறதா ? அப்படியிருந்தால் அதன் விவரம் யாது ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்கு அதைப்பற்றி எதுவும் எழுதவில்லை.

*Water-supply to the City of Madras*

* **406 Q.—Sri S. M. ANNAMALAI :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

சென்னை நகரில் ஒரு ஆளுக்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?